# பத்திரிக்கை செய்தி

## படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் (UYEGP)

## தமிழக அரசின் மானியத்துடன் கூடிய தொழில் கடன் வசதி

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) என்ற சுயமாக தொழில் செய்வதற்கான கடனுதவி திட்டத்தினை தமிழ்நாடு அரசு மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்களால் 01.08.2017-ம் தேதியன்று படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்திற்கு இணையதளம் மூலமாக (www.msmeonline.tn.gov.in/uyegp) விண்ணப்பிக்கும் முறை துவக்கி வைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி தொழிற் திட்டங்களுக்கு ரூ.10.00 இலட்சமும் சேவை மற்றும் வியாபாரத் தொழில் திட்டங்களுக்கு அதிகபட்சமாக ரூ. 5.00 இலட்சம் வரை சுய தொழில் செய்ய வங்கிகள் மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி பெறலாம் என தமிழக அரசின் அரசாணை எண்.69, நாள்.11.10.2019 மூலம் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விண்ணப்பிப்பதற்கு குறைந்தபட்ச கல்வி தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். அதிகபட்ச வயது பொது பிரிவினருக்கு 35, சிறப்பு பிரிவினருக்கு 45 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கடன் பெறுபவர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 25% (அதிகபட்சம் ரூ. 1,25,000/- வரை) அரசு மானியமாக வழங்குகிறது.

கரூர் மாவட்டத்தை சார்ந்த ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற www.msmeonline.tn.gov.in/uyegp இணையதள முகவரியில் விண்ணப்பம் செய்து உரிய ஆவணங்களுடன் பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், கரூர் அவர்களுக்கு விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். மேலும் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், கரூர் அலுவலகத்தை (04324 255177) என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கரூர் மாவட்டம்.